தளம் கட்டமைப்பு

#146679

THALAM
தளம்

தளத்தின்

விருட்சம்

கிளை – 2024

தளை –05

தளத்தின்

விருட்சம்

கிளை - 2024

துளை -03

உள்ளடக்கம்

- தளம் - முன்னுரை ஆசிரியர் பக்கம்
- வாழ்க்கை கதை
- மாணவர் பக்கம் - ஆக்கங்கள்
- அறிந்ததும் அறியாததும்
- தளத்தின் தடங்கள்
- ஆனி மாதத்தில் நடைபெறவிருக்கும் நிகழ்வுகள்
- புகைப்படங்கள்
- இதழாசிரியர் குழாம் விபரம்

முன்னுரை

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை" என்பதற்கிணங்க தளர்ந்துபோகாது இவ்வருடத்தின் "தளை – 4" உடன் வெற்றிகரமாக தடம் பதிக்கிறது நம் விருட்சம்.

இளையோரின் கைவண்ணத்தில் உருவான கட்டுரை, கவிதை, ஓவியம், சிறுகதை, கைத்தொலைபேசி புகைப்படங்கள் போன்ற பல்வேறு படைப்புக்கள் ஒன்றிணைந்து இம்மாத இதழானது உருவாகியுள்ளது. இது முழுவதுமே ஒரு மாறுபட்ட களத்தை கொண்டிருக்குமென்று நினைக்கின்றேன். அதுமட்டுமன்றி புதிதாக வாழ்க்கை வரலாறு, தொழிநுட்பம், மருத்துவம் போன்ற சுவாரசியமான விடயங்களையும் இணைத்துள்ளோம்.

வேறுபட்ட கோணங்களில் ஒவ்வொரு முறையும் வெளிவரும் இதழானது இம்முறை கரும்புள்ளிகள் களையப்பட்டு வித்தியாசமான வடிவமைப்பில் காட்சி அளிப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். எங்களுடன் சேர்ந்து தாங்களும் தளத்தின் விருட்சத்தினை வாசித்து பயன் பெறுவீராக, அத்துடன் ஏனையோரையும் பயன் பெற செய்வீராக.

ஆசிரியர் உரை

அன்பார்ந்த தோழர்களே...

தளம் அமையத்தின் ஒருங்கிணைப்பில் திருமலை இளைஞர்கள் கைவண்ணத்தில் கடந்த மாதம் வெளிவந்த விருட்சம் மாத இதழானது வாசகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.

இவ்விதழை திறம்பட வெளியிட உதவிய நண்பர்கள், வாசகர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளை சமர்ப்பிப்பதோடு விருட்சத்தின் கடந்த மாத கிளையின் வரவேற்பு எம்மை அதிக உற்சாகத்துடன் இம்மாத இதழினை உங்கள் முன் கொணர பெரும் தூண்டுதலாக இருந்தது.

அத்துடன் கடந்த மாதம் வெளிவந்த விருட்சம் மாத இதழ் திருமலையின் பல நூலகங்களில் மற்றும் பாடசாலை நூலகங்களிலும் வன்பிரதியாக கிடைக்கும். இம்மாத இதழானது முற்றுமுழுதாக மாணவர்களுக்காக தயார் செய்யப்பட்டு வெளிவருகிறது. வாசித்து பயன்பெறுங்கள்.

கடந்த மாத இதழின் விமர்சனங்களை கருத்தில் கொண்டும் இம்முறை இவ்விதழிலானது பல மாற்றங்களுடனும், புது குழுவுடனும் புதுப்பொலிவுடன் உங்கள் கைகளில் கிடைக்கும்.

இவ்விருட்சமானது இத்திருமலை மண்ணில் மேலும் கிளை விட்டு துளிர்க்க உங்கள் ஆதரவினை படைப்புகளாக எதிர்பார்க்கிறோம். இவ்விதழை பற்றிய கருத்துக்கள், விமர்சனங்கள் மற்றும் ஆக்கங்களை அனுப்பி வைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம் – 0776243212

வாழ்க்கைக் கதை..!

மும்பையில் வளமும் புகழும் மிகுந்த "டாடா குடும்பத்தில்" 1937 ஆம் ஆண்டு டிசம்பர் 28ஆம் திகதி "சூனு" மற்றும் "நவால் ஹார்முஸ்ஜி டாடா" தம்பதியினருக்கு மகனாக "ரத்தன் டாடா" பிறந்தார்.

இவரது ஏழு வயதின் போதே பெற்றோர்கள் பிரிந்ததால் டாடாவின் குழந்தைப் பருவ வாழ்க்கையானது இடர் நிறைந்திருந்தது. பாட்டி "லேடி நவஜிபாய்" அரவணைப்பில் வளர்ந்த இவர் மும்பை மற்றும் சிம்லாவில் பள்ளிப் படிப்பை முடித்தார்.

தந்தையின் நிர்ப்பந்தத்தில் இயந்திரப் பொறியியலில் ரத்தன் டாடாவிற்கு விருப்பமில்லாத போதும் கண்டிப்பான தந்தையின் ஆணையை மறுக்க முடியாது பாதி மனதுடன் இயந்திரப் பொறியியல் பயில அமெரிக்கா சென்றார். ஆனால் அங்கு அவரால் முழுமனதுடன் கல்வியில் கவனம் செலுத்த முடியவில்லை. இதற்கு காரணம் கட்டடக் கலையில் அவருக்கிருந்த ஆர்வம் தான்.

தன்னால் இனி இயந்திரப் பொறியியல் தொடர முடியாது, தனக்கு கட்டடக் கலையைப் பயிலவே அதிக விருப்பம் இருப்பதாக பாட்டியிடம் கூறினார். அதனை ஏற்ற பாட்டி கட்டிடக் கலையை பயில ஏற்பாடு செய்தார். பாட்டியின் உதவியுடன் "கோர்னெல் பல்கலைக்கழகத்தில்" கட்டிடக்கலையைப் பயின்றார்.

இதன்படி 1962 ஆம் ஆண்டு கோர்னெல் பல்கலைக்கழகத்தில் கட்டமைப்பு பொறியியலில் பி. எஸ். சி இளங்கலை பட்டம் பெற்றதை தொடர்ந்து 1975இல் வணிகப் பள்ளியில் உயர் மேலாண்மை பட்டத்தையும் பெற்றார். நிர்வாக மேற்படிப்பை "ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில்" படித்து மிகப் பெரிய நிறுவனமாக இன்றளவும் விளங்கும் "ஐ. பி. எம். நிறுவனத்தில்" பணிக்குச் சேர்ந்தார். எனினும் தாய் நாட்டின் மீது கொண்ட பற்றின் காரணமாக இந்தியாவிற்கே திரும்பி தனது குடும்ப வணிகத்தை தொடர்ந்தவர் 1975ஆம் ஆண்டிலேயே டாடா குழுமத்தில் சேர்ந்தார்.

முப்பது வருடங்கள் அயராத உழைப்பின் பயனாக 1991இல் டாடா குழுமத்தின் தலைவராகவும், நிறுவனராகவும் நியமிக்கப்பட்டார். இவரின் பின்னரே டாடா குழுமம் அசுர வளர்ச்சியை கண்டது. டாடா குழுமம் இவரின் சொந்த நிறுவனமெனினும் ரத்தன் டாடா சிறுசிறு பொறுப்புகளில் இருந்துள்ளமையே அவரின் வெற்றியின் ரகசியமாகின்றது.

சர்வதேச சந்தையில் தங்கள் நிறுவனத்திற்கான வாய்ப்புகளைச் சரியான வகையில் கண்டுபிடித்ததுடன் இரும்பு, ஐடி துறை, கெமிக்கல், கார்கள் எனப் பல துறைகளிலும் தனது வர்த்தக நடவடிக்கையை வெற்றிகரமாக விரிவுபடுத்தினார்.

இதில் ஐடி துறை சார்ந்த "டாடா கன்சல்டன்சி சர்வீசஸ்" இன்றளவிலும் இந்தியாவில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாக நிலைத்து வருவதுடன் பல நாடுகளிலும் பல்லாயிரக்கணக்கான ஊழியர்களுக்கு வாழ்வளித்து வருகின்றது. இந்நிறுவனம் ஆண்டுக்கு ஒரு பில்லியன் டொலருக்கு மேல் வருவாயை ஈட்டித் தருவது மட்டுமன்றி வாகன தயாரிப்பிலும் தனக்கென ஒரு இடத்தை கொண்டுள்ளது.

டாடா நிறுவனத்தின் உற்பத்திகளில் ஒன்றான நனோ கார்களை நடுத்தர குடும்பங்களின் கார் கனவுகளை நனவாக்கிக் கொள்ள குறைந்த விலையில் தயாரிக்கப்படுவதுடன், இன்று சர்வதேச அளவில் இரும்புத் துறையிலும் தனக்கென ஒரு இடத்தை வகிக்கிறது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியிலும் ரத்தன் டாடாவின் பங்களிப்பு அளப்பரியதாகும்.

ரத்தன் டாடா நவீன வளர்ச்சியை தனக்கு சாதகமாக கையிலெடுத்து "நெல்கோ நிறுவனம்" மூலம் செயற்கைக்கோள் சேவையை வழங்கத் தொடங்கினார். இந்தப் புதிய மாற்றம் நெல்கோ நிறுவனத்தை லாபகரமாக மாற்றியது. குறுகிய நாட்களிலேயே வளர்ச்சியை அதிகரித்தது அந்நிறுவனம் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி வெற்றியடையவும் டாடாவின் இந்த வியூகம் பலரையும் வியப்பில் ஆழ்த்தியது. தொடர்ந்து, மும்பையில் நடந்த விருது விழாவில் இவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதும் வழங்கப்பட்டது.

இன்று வரை திருமணம் செய்து கொள்ளாத ரத்தன் டாடா தனது ஓய்வின் பின்பு டாடா நிறுவனத்தின் தலைவராக யாரை நியமிக்கலாம் என தீவிர ஆலோசனை செய்ததன் நிமித்தம் டாடா நிறுவனத்தின் பி. சி. எஸ். தலைவராக இருந்த தமிழரான "நடராஜன் சந்திரசேகரனின்" நினைவு அவருக்கு வரவே இவரைவிட பொருத்தமான நபர் வேறு யாரும் கிடைக்க மாட்டார் எனக் கருதி அவரை டாடா நிறுவனத்தின் தலைவராக நியமித்தார்.

பாரம்பரிய டாடா குழுமத்தின் தலைவராக ஒரு தமிழர் நியமிக்கப்பட்டது அனைத்துத் தமிழர்களுக்கும் பெருமையான தருணமாகும். இளைய தலைமுறைக்கும், சாதிக்கத் துடிக்கும் நபர்களுக்கும், சக போட்டியாளர்களுக்குமே ரத்தன் டாடா முன்னுதாரணமாக நபராக திகழ்கிறார்.

பணக்காரர் பட்டியலில் இவரின் பெயர் இருக்கிறதோ இல்லையோ ஆனால் மனிதநேயர் என்ற பட்டியலில் அவரின் பெயர் நிச்சயம் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

கதை கேட்போம் வாங்கோ...

நாம் அனைவரும் ஒரு கதையைக் கேட்டிருக்கிறோம். இளம் ஐசக் நியூட்டன் ஒரு ஆப்பிள் மரத்தின் கீழ் அமர்ந்து மர்மமான பிரபஞ்சத்தைப் பற்றி சிந்திக்கிறார். திடீரென்று – திகைப்பு! – ஒரு ஆப்பிள் அவரது தலையில் அடிக்கிறது. "ஆஆ..!" அவர் கத்துகிறார், "யுரேகா!" அது ஒருவேளை, ஆப்பிளை தரையை நோக்கி மோதச் செய்த அதே விசையே சந்திரனை பூமியை நோக்கியும் பூமியை சூரியனை நோக்கியும் விழ வைக்கிறது. ஈர்ப்பு விசை என்பதை அவர் ஒரு நொடியில் புரிந்துகொள்கிறார்.
அல்லது, அப்படி ஏதாவது. அபோக்ரிபல் கதை அறிவியல் வரலாற்றில் மிகவும் பிரபலமான ஒன்றாகும், இப்போது நியூட்டன் உண்மையில் என்ன சொன்னார் என்பதை நீங்களே பார்க்கலாம். லண்டனின் ராயல் சொசைட்டியின் காப்பகத்தில் வைக்கப்பட்டது ஆப்பிள பற்றிய உண்மையைக் கொண்ட கையெழுத்துப் பிரதியாகும்.



இது நியூட்டனின் சுயசரிதையாக மாறப்போவதற்கான கையெழுத்துப் பிரதியாகும், இது சர் ஐசக் நியூட்டனின் நினைவுகள் என்ற தலைப்பில் தொல்பொருள் ஆராய்ச்சியாளரும் நியூட்டனின் முதல் வாழ்க்கை வரலாற்றாசிரியர்களில் ஒருவருமான வில்லியம் ஸ்டுக்லே எழுதியது மற்றும் 1752 இல் வெளியிடப்பட்டது. நியூட்டன் ஆப்பிள் கதையை ஸ்டுக்லியிடம் கூறினார்.

"இரவு உணவுக்குப் பிறகு, வானிலை சூடாக இருந்ததால், நாங்கள் தோட்டத்திற்குச் சென்று, சில ஆப்பிள் மரங்களின் நிழலில் பானம் குடித்தோம். அவர் என்னிடம் கூறினார், முன்பு, புவியீர்ப்பு எண்ணம் அவரது மனதில் தோன்றியபோது, அவர் அதே நிலையில் தான் இருந்தார். அவர் சிந்திக்கும் மனநிலையில் அமர்ந்திருந்தபோது, ஒரு ஆப்பிள் விழுந்தது. அந்த ஆப்பிள் ஏன் எப்போதும் தரையில் செங்குத்தாக இறங்க வேண்டும் என்று தனக்குள்ளேயே நினைத்துக்கொண்டான்." தொடரும்...

இளையோரின் படைப்புக்கள்

வரலாற்றில் திருகோணமலை...

நாலின மக்களை ஈன்றெடுத்த கருவறை
நாகரிகம் வளர்க்கும் பண்பாட்டறை
பருவங்கள் கடந்தும் ஓய்ந்திடா அலை
பட்டதாரிகள் பல தோற்றுவித்த பல்கலை

வம்சங்கள் சரித்திரம் காண்பிக்கும் கல்லறை
வனப்புயிர்கள் மையலுறும் மணவறை
அத்தனையும் மகுடமாய் அணிதலை
அறிவியலை அறிவிக்கும் அறிவலை

கமழ் வீசும் நறுமலர்களின் தேனறை
கண்ணியம் கற்றுத்தரும் பாசறை
திருக்கோணேசர் அருள் பெற்ற திருமலை
வரலாற்றில் அவள் இன்று திருகோணமலை...

கம்ஷிகா சிவச்சந்திரன்

அம்மா

உன் மணி வயிற்றில்
புள்ளியாய் உதிக்கும் என்னை
புதையல் போல் காத்திடுவாய்
ஈரைந்து மாதங்கள் ஈன்றெடுக்கும் வரை – உன்
இயலாமைகளின் போதும் என்னை
உன்னோடு சுமந்திடுவாய்
எட்டி உனை நான் உதைப்பினும்
தட்டிக் கொடுத்து தாங்கிடுவாய்
தொப்புள் கொடியால் தொட்டணைத்து
தாலாட்டி தூங்க வைப்பாய்
உடல் பிளந்து என்னை
உன் பிள்ளை நான் என்று
உலகிற்கு காட்டிடுவாய்
சோதியை பாலாக்கி
உணவாக ஊட்டிடுவாய்
நிலாச்சோறு நான் உண்ண
நித்தம் நீ நிறைவடைவாய்
உன் விரல் பிடித்து நான் நடக்க – நீயோ
உலகினை காட்டிடுவாய்
இதுபோல,
என் விரல் பிடித்து நீ நடக்க வேண்டுமடி
உலகின் எல்லை வரை

வேல் திரவியம்

Father of a Field

- உயிரியலின் தந்தை : ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்
- இயற்பியலின் தந்தை : ஐசக் நியூட்டன்
- வேதியியல் தந்தை : ஜோபிர் பின் ஹயான்
- புள்ளியியல் தந்தை : ரொனால்ட் ஃபிஷர்
- விலங்கியல் தந்தை : அரிஸ்டாட்டில்
- வரலாற்றின் தந்தை : ஹெரோடோடஸ்
- நுண்ணுயிரியலின் தந்தை : லூயிஸ் பாஸ்டர்
- தாவரவியலின் தந்தை : தியோஃப்ராஸ்டஸ்
- இயற்கணிதத்தின் தந்தை : முஹம்மது இபின் மூசா அல்-குவாரிஸ்மி
- இரத்தக் குழுக்களின் தந்தை : லேண்ட்ஸ்டெய்னர்
- மின்சாரத்தின் தந்தை : பெஞ்சமின் பிராங்க்ளின்
- முக்கோணவியலின் தந்தை : ஹிப்பர்கஸ்
- வடிவவியலின் தந்தை : யூக்ளிட்
- நவீன வேதியியலின் தந்தை : அன்டோயின் லாவோசியர்
- ரோபாட்டிக்ஸின் தந்தை : ஏங்கல்பெர்கர்
- மின்னணுவியலின் தந்தை : மைக்கேல் ஃபரடே
- இணையத்தின் தந்தை : வின்டன் செர்ஃப்
- பொருளாதாரத்தின் தந்தை : அடம் ஸ்மித்
- வீடியோ கேம்களின் தந்தை : ரால்ப் பேர்
- கட்டிடக்கலையின் தந்தை : லூயிஸ் ஹென்றி சல்லிவன்
- மரபியல் தந்தை : கிரிகோர் ஜோஹன் மெண்டல்
- நானோ தொழில்நுட்பத்தின் தந்தை : ஹென்ரிச் ரோரர்
- சி மொழியின் தந்தை : டென்னிஸ் ரிச்சி
- உலகளாவிய வலையின் தந்தை : டிம் பெர்னர்ஸ்-லீ
- தேடுபொறியின் தந்தை : ஆலன் எம்டேஜ்
- கால அட்டவணையின் தந்தை : டிமிட்ரி மெண்டலீவ்
- வகைபிரித்தல் தந்தை : கரோலஸ் லின்னேயஸ்
- அறுவை சிகிச்சையின் தந்தை (ஆரம்பகாலம்) : சுஷ்ருதா
- கணிதத்தின் தந்தை : ஆர்க்கிமிடிஸ்
- மருத்துவத்தின் தந்தை: ஹிப்போகிரட்டீஸ்
- ஹோமியோபதியின் தந்தை: சாமுவேல் ஹானிமன்

பொன்மொழிகள்

- நேரத்தைத் தள்ளிப் போடாதே தாமதத்தால் அபாயமான முடிவே ஏற்படும்.
  –ஷேக்ஸ்பியர்

- நீ வெற்றி பெற்றால், நீ பிறருக்கு நின்றுகொண்டு விளக்கத் தேவையில்லை. நீ தோற்றால் நீ அங்கு நின்று உன் தோல்விற்கான காரணங்களை விளக்கிக் கொண்டிருக்கக் கூடாது.
  –அடால்ஃப் ஹிட்லர்

- எவராவது தான் தன்னுடைய வாழ்நாளில் ஒரு பிழையும் செய்ததில்லை என்று நினைத்தால் அவர்கள் தாம் தம் வாழ்வில் புதிய முயற்சிகளை செய்து பார்த்ததில்லை என்று பொருள்.
  –ஐன்ஸ்டைன்

- காற்றாடி காற்றை எதிர்த்தே உயரச் செல்கிறது காற்றுடன் அல்ல
  –வின்ஸ்ட்டன் சர்ச்சில்

- மனிதன் சுதந்திரமாகச் செயல்படுவதைக் காட்டிலும், மற்றவர்களைச் சார்ந்தே வாழ்கிறான்.
  –பெர்னாட்ஷா

- நாம் எப்போதுமே வாழ்வதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறோம் ஆனால் வாழ்வதில்லை
  –எமர்சன்

- உலகம் எவ்வளவு பெரியதோ, அவ்வளவு பெரியதாக உங்கள் இதயத்தை விரிவாக்குங்கள்
  –விவேகானந்தர்

- நேற்று அசாத்தியமாய் இருந்தது, இன்று சாத்தியமாகும் அற்புதத்தை ஒவ்வொரு நாளும் நாம் கண்டு வருகிறோம்
  –காந்திஜி

- கல்வியின் பயன் எதையும் கோபப்படாமலும், தன்னம்பிக்கையை இழக்காமலும் செவிசாய்க்கும் திறன்
  –ராபர்ட் பிராஸ்ட்

- ஒவ்வொருவரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்களேயொழிய தம்மை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை.
  –லியோ டால்ஸ்டாய்

தெரிந்த மனிதர்கள்...
தெரியாத தகவல்கள்..!

1. ஷேக்ஸ்பியருக்கு 18 வயதிலேயே திருமணம் முடிந்து விட்டது. எட்டு வயது வித்தியாசத்தில் ஆனி ஹேதவே என்னும் 26 வயதுப் பெண்ணை அவர் திருமணம் செய்து கொண்டார்.

2. சார்லஸ் டிக்கன்ஸ் எழுதிய நூல்களை மக்கள் மத்தியில் அவரே படித்து நடித்துக் காட்டுவாராம்.

3. மருத்துவத்தின் தந்தை எனப்படும் "ஹிப்பொகிரேட்டஸ்" மருத்துவம் குறித்து அந்தக் காலத்தில் 70 நூல்கள் எழுதியுள்ளார்.

3. விஞ்ஞான மேதை கலிலியோவின் காலத்தில் காலத்தை காட்டும் கடிகாரங்கள் நடைமுறைக்கு வரவில்லை. கலிலியோ தம்முடைய ஆராய்ச்சிகளின்போது கால அளவை நிர்ணயிப்பதற்கு தம்முடைய கைகளின் நாடித்துடிப்பை அளவுகோலாகக் கொண்டார்.

4. லியனாடோடாவின்சி, தனது இடது கையில் காகிதத்தில் வலமிருந்து இடமாக எழுதினார். அவரது ஆராய்ச்சி நூல்களை முகம் பார்க்கும் கண்ணாடியின் உதவியால் மட்டுமே படித்துப் பார்க்க முடியும்.

5. ஜோன் கென்னடி இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னால், அவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் சிறிது நேரம் அமர்ந்திருந்தாராம்.

6. சர். ஐசக் நியூட்டன் தனது கணிதப் பிரச்சினைகளுக்கெல்லாம் வழி கண்டு பிடித்தது அவரது கனவுகளில்தானாம்.

7. ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க அதிபராக இருந்த காலம் முழுவதும் அவரது பூட்ஸை அவரே துடைத்துக் கொண்டாராம்.

8. மாவோ தனது இளம் பருவத்தில் அருகில் உள்ள மலைக் குன்றுகளிலேயே எப்போதும் அலைந்து திரிந்து கொண்டிருப்பாராம். இந்தப் பயிற்சிதான் அவருக்கு பின்னாளில் தன்பெரும் படையுடன் 1600 மைல்மலைகளிலேயே நீண்ட பயணம் போக உதவியது.

அம்மா

ஈன்ற தாயிற்கு ஒப்பாக இவ்வுலகில் எதுவுமே இல்லை. – நான்மணிக்கடிகை

உயர்ந்த பதவிகளையும் மேலான அந்தஸ்தினையும் ஒருவன் வகிக்க முடியும் ஆனால் தாயின் இடத்தை மட்டும் யாராலும் வகிக்க முடியாது. – மெர்சாப்

தாயார் எவ்வளவு உற்சாகமாக அறிவு புகட்ட விரும்புகிறாளோ அவ்வளவு உற்சாகமாக குழந்தையும் அதை ஏற்கவிருக்கும். – எமெர்சன்

தாயின் அன்பை வெளியிட உலகத்தில் எந்த மொழியிலும் போதிய வார்த்தைகள் இல்லை. – கோபீன்

நீ எப்படி இருக்கவேண்டும் என்றுதான் உன் அப்பா சொல்வார் நீ எப்படி இருக்கிறாய் என்று சொல்வது உன் அம்மாதான். – பீட்டர் டேவிசன்

மிகவும் மரியாதைக்குரியவர் அன்னையே. மிகவும் கசப்பானது தனிமையே. மிகவும் துயரமானது மரணமே. – வில்ப்ரெட் பங்க்

நீ மேன்மையடைய விரும்பினால் உன் தாய் தந்தையர்கள் சொல்கேட்டு நடப்பதுடன் அவர்களையும் காப்பாற்றவேண்டும். – திருவள்ளுவர்

உலகம் அனைத்தையும் ஒரு தட்டிலும், என் தாயை மறு தட்டிலும் வைத்து நிறுத்தால், உலகின் தட்டுத்தான் மேலேயிருக்கும். – லாங்டேல் பிரபு

அன்னையின் இதயமே குழந்தையின் பள்ளிக்கூடம். – பீச்சர்

அன்னையின் மடியிலிருந்துகொண்டு முதல் முறையாகக் கேட்ட கதைகள் முழுதும் மறக்கப்படுவதில்லை. வாழ்க்கைப் பாதையில் கொடுமையான வெப்பத்தால் வெந்து தவிக்கும் நமக்கு இது ஒன்றே வற்றாத நீரூற்று. – ரஃபீனி

தாயின் நற்குணங்களும், தந்தையின் பாவங்களும் குழந்தைக்கு வந்து சேரும் என்று எங்காவது எழுதி வைத்தல் நலம். – டிக்கன்ஸ்

குழந்தையின் எதிர்காலக்கதி எப்பொழுதும் தாயின் வேலையால் அமைகின்றது. – நெப்போலியன்

உலக ஆஸ்துமா தினம்



ஆண்டுதோறும் மே முதல் செவ்வாய்

உலக ஆஸ்துமா தினம் என்பது ஆஸ்துமா பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு குறிப்பிடத்தக்க உலகளாவிய நிகழ்வாகும். இது உலகெங்கிலும் மில்லியன் கணக்கான மக்களை பாதிக்கும் ஒரு நாள்பட்ட சுவாச நிலை.

உலக ஆஸ்துமா தினம் ஆண்டுதோறும் மே முதல் செவ்வாய் அன்று அனுசரிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும், ஆஸ்துமா மேலாண்மை, தடுப்பு அல்லது ஆராய்ச்சியின் பல்வேறு அம்சங்களை முன்னிலைப்படுத்த ஒரு குறிப்பிட்ட தீம் தேர்ந்தெடுக்கப்படுகிறது.

உலகெங்கிலும் உள்ள சுகாதார வல்லுநர்கள் மற்றும் பொது சுகாதார அதிகாரிகளை உள்ளடக்கிய கூட்டுத் திட்டமான ஆஸ்துமாவுக்கான உலகளாவிய முன்முயற்சி மூலம் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆஸ்துமா சிகிச்சையை மேம்படுத்தவும், உலகளவில் அந்த நிலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் செயல்படுகிறது.

- உலகளாவிய சுகாதாரப் பிரச்சினையாக ஆஸ்துமா பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- நோயாளிகள் மற்றும் சுகாதார வழங்குநர்களிடையே ஆஸ்துமா கல்வி மற்றும் சுய மேலாண்மையை ஊக்குவித்தல்.
- ஆஸ்துமா பராமரிப்பு, நோயறிதல் மற்றும் சிகிச்சை அணுகலை மேம்படுத்துவதற்கான கொள்கைகள் மற்றும் ஆதாரங்களுக்காக வாதிடுதல்.
- ஆஸ்துமா காரணங்கள், தூண்டுதல்கள் மற்றும் சிகிச்சைகள் ஆகியவற்றை நன்கு புரிந்துகொள்ள ஆராய்ச்சி முயற்சிகளை ஆதரித்தல் போன்றவை உலக ஆஸ்துமா தினத்தின் முதன்மை இலக்குகளாகும்

உலக ஆஸ்துமா தினத்தில், இந்த நோக்கங்களை அடைய பல்வேறு நடவடிக்கைகள் நடைபெறுகின்றன

- கல்விப் பிரச்சாரங்கள்: ஆஸ்துமா அறிகுறிகள், தூண்டுதல்கள், மேலாண்மை மற்றும் தடுப்பு உத்திகள் பற்றி மக்களுக்குத் தெரிவிக்க, சுகாதார அமைப்புகள், வழக்கறிஞர் குழுக்கள் மற்றும் பொது சுகாதார முகமைகள் கல்வி பிரச்சாரங்களை நடத்துகின்றன.
- சமூக நிகழ்வுகள்: ஆஸ்துமா உள்ளவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு தகவல் மற்றும் ஆதாரங்களை வழங்குவதற்காக உள்ளூர் சமூகங்கள் சுகாதார கண்காட்சிகள், கருத்தரங்குகள், பட்டறைகள் மற்றும் திரையிடல்கள் போன்ற நிகழ்வுகளை ஏற்பாடு செய்யலாம்.
- மீடியா கவரேஜ்: கட்டுரைகள், நிபுணர்களுடனான நேர்காணல்கள் மற்றும் பொதுச் சேவை அறிவிப்புகள் உட்பட ஆஸ்துமா தொடர்பான தலைப்புகளில் அடிக்கடி ஊடகங்களில் அதிக கவரேஜ் உள்ளது.
- சமூக ஊடக ஈடுபாடு: சூறுழசடனயுளவாஅயனுயல போன்ற ஹேஷ்டேக்குகளைப் பயன்படுத்தி நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் ஆன்லைன் விவாதங்களில் பங்கேற்கிறார்கள், கல்விப் பொருட்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள் மற்றும் சமூக ஊடக தளங்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார்கள்.

உலக ஆஸ்துமா தினம் உலகளவில் ஆஸ்துமா விழிப்புணர்வு, ஆலோசனை மற்றும் கவனிப்பை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. சுகாதார வல்லுநர்கள், கொள்கை வகுப்பாளர்கள், நோயாளிகள் மற்றும் பொதுமக்களிடையே ஒத்துழைப்பை வளர்ப்பதன் மூலம், இது சிறந்த ஆஸ்துமா மேலாண்மை, குறைக்கப்பட்ட களங்கம் மற்றும் ஆஸ்துமாவுடன் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உதவுகிறது.

ஒட்டுமொத்தமாக, உலக ஆஸ்துமா தினம் ஆஸ்துமாவுடன் தொடர்புடைய சவால்களை எதிர்கொள்ளவும், ஆஸ்துமா உள்ள ஒவ்வொருவரும் ஆரோக்கியமான மற்றும் நிறைவான வாழ்க்கையை வாழக்கூடிய உலகத்தை உருவாக்குவதற்கான ஒரு முக்கிய தளமாக செயல்படுகிறது.



குறுக்கெழுத்துப் புதிர்

1		2			3			■	■
	■		■	■		■	■		4
5			■	■		6	■	■	■
	■	■	7		■		■	■	■
		8	■	■	■		9	■	■
■			10	■	■	■	■	11	

மேலிருந்து கீழ்:

1. ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்தவர்
2. “இது“ வாடியதைக் கண்டபோதே
   வாடியவர் வள்ளலார்.
3. ஔவையார் எழுதிய நூல்
4. வேண்டுவதை அருள்வதால்
   “இந்த விநாயகர் என
   அவருக்கு பெயர்
8. பிதாமகன் இவரின் மறுபெயர் ....

இடமிருந்து வலம்:

1. நாயன்மார்களை இப்படுவர் குறிப்பிடுவர்
5. நான்கு வேதங்களில் இரண்டாவது
7. இசையால் கண்ணனை துதித்து
   மகிழ்ந்தவள்.

வலமிருந்து இடம்:

4. அனுமதி பெறாததால் ஊர்வலத்திற்கு
   ”இது” விதித்தனர்
6.”அகற்றல்”என்பதன் ஒத்த சொல்
8. பாண்டவர்களில் பலசாலி
9. .... , பசு , பாசம்
10. .... லட்சுமி

IS CANVA EASY
TO USE?

சித்திரமும் கைப்பழக்கம்

இன்றைய தொழில்நுட்பம் பற்றிய சுவாரசியமான செய்திகள்

ஜப்பான் முதன் முதலில் **6G** சாதனை அறிமுகம் செய்தது.



ஜப்பான், **5G** ஐ விட 20 மடங்கு வேகமான **6G** தொழில்நுட்பத்திற்கான முதல் வெற்றிகரமான டேட்டா டிரான்ஸ்மிஷனை வெற்றிகரமாக செய்துள்ளது. இது ஒரு முக்கிய சாதனை, **6G** தொழில்நுட்பம் 15.28 ஜிபிஎஸ் வேகத்தில் தரவை அனுப்பியது, இது **6G** இன் தற்போதைய வேகத்தை விட 20 மடங்கு அதிகம். **6G** இன்னும் ஆரம்ப கட்டத்தில் உள்ளது, ஆனால் இது வீடியோ ஸ்ட்ரீமிங், மெய்நிகர் யதார்த்தம் மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற பல்வேறு பயன்பாடுகளுக்கு புரட்சியை ஏற்படுத்தும் திறன் கொண்டது.

வாட்ஸ்அப்பில் விரைவில் இணைய இணைப்பு இல்லாமல் புகைப்படம், வீடியோ பகிரும் அம்சம்!

வாட்ஸ்அப் விரைவில் ஒரு புதிய அம்சத்தை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது,இது தற்போது பீட்டா சோதனையில் உள்ளது. இந்த புதிய அம்சம் குறிப்பாக குறைந்த இணைய இணைப்பு அல்லது வரையறுக்கப்பட்ட தரவுத் திட்டங்களைக் கொண்ட பயனர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். இது பயணிகள் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் நபர்களுக்கு மற்றும் இணைய இணைப்பு இல்லாத நேரங்களில் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை பகிர்ந்து கொள்ள விரும்புபவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

அன்னையர் தினம்

இவ்வுலகில் எதிர்பார்ப்பு இல்லாத ஒரே அன்பு அம்மா. எவ்வளவு வயதானாலும், வாழ்வில் ஒரு கஷ்டம் வரும்போதும் மனம் அழைப்பதும் அவளே. தமிழின் உயிர் எழுத்துக்களில் முதலாகி, மெய் எழுத்துக்களில் இடையாகி, உயிர்மெய் எழுத்துக்களில் கடையை முற்றுப்பெற்று வரும் பெயர் கொண்டவள் அம்மா.

நம்மால் கடவுளை கண்ணால் பார்க்க முடியாது. ஆனால் கண்முன்னே வாழ்ந்து கொண்டிருக்கும் கடவுள் அன்னை. ஒரு உயிரைத்தாங்கி ஒரு வெளிப்படுத்தக்கூடிய ஆதார சுருதியும் அன்னையே. ”அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என்றார் ஔவைப் பாட்டியார்.

அமெரிக்காவில் வாழ்ந்த, இறுதி மூச்சு வரைக்கும் சமூக ஆர்வலராக இருந்த மரியா ஜார்விஸ் என்ற பெண்மணியின் பார்வையற்ற மகள், ஆன் ரீவ்ஸ் ஜார்விஸ் தன் தாயின் நினைவாக உள்ளூரில் உள்ள சர்ச் ஒன்றில் மே மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை அன்று சிறப்பு வழிபாடு ஒன்றை நடத்தினார். தன் தாயின் பெருமையை போற்றி வழிபடுவது போல் இன்றைய தினத்தில் அனைவரும் அவர்களின் தாயை வணங்க வேண்டும் என கூறினார். இதுவே உலக அளவில் தாயை போற்றும் வகையில் கொண்டாடப்படும் அன்னையர் தினமானது. அன்றிலிருந்து இன்று வரை மே இரண்டாம் ஞாயிற்றுக்கிழமை அன்று அன்னையர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அம்மாவுக்கு அம்மா என்ற ஒரு ரோல் மட்டும் இல்லை. பெற்றோருக்கு மகளாக, ஒருவருக்கு மனைவியாக, அம்மா என்ற அருமையான அந்தஸ்தை அடைந்து பணிகளை சுமந்து, வேலைக்குச் சென்று, குடும்ப பாரத்தை பகிர்ந்து, கஷ்டம் இருந்தாலும் அதை வழியே காட்டிக்கொள்ளாமல், அமைதியாக அன்புடன் சிரித்து நடந்து கொள்ளும் பாங்கு. இத்தனையும் அம்மா என்ற அந்த உயிருக்குள் மட்டுமே காண முடியும்.

அன்னையர்கள் பலவிதமான கஷ்டங்களுக்கு இடையில் நம்மை வளர்த்து வருகிறார்கள். மேலும் பல விதமான சாதனைகளையும் படைத்து வருகிறார்கள்.

கனவில் இருக்கும் குழந்தை ஆணா பெண்ணா என ஆணோ பெண்ணோ என அறியாத போதிலும் தன் குழந்தையை பத்திரமாய் சுமந்து உலகின் அழகை பார்க்க வைக்கும் உன்னத உறவு தான் அன்னை. நாம் கருவிலே இருக்கும்போதே கருவிலேயே பல சவால்களை எதிர்ப்புகளையும் தாண்டி இந்த சமூகத்திற்கு பெறுமதி மிக்கவர்களாக நம்மை தருபவர்கள் அன்னையர்களே. எல்லா உறவுகளையும் ஒன்றிணைத்து தன்னலம் கருதாது எல்லா உறவுகளும் முக்கியம் எனவாழும் பெண் தெய்வங்களே அன்னையர்கள் ஆவர்.

ஒரு மனிதனின் வாழ்க்கையை பிறப்பிலிருந்து தீர்மானிக்கின்ற தாயை தெய்வமாக போற்றுகிற சமூகமாக நமது கட்டமைப்புகள் இருந்தாலும் இதே சமூக அமைப்புதான் இன்றைக்கு முதியோர் இல்லங்களை வீதிதோறும் திறக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டிருக்கிறது..

”ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனை
சான்றோன் எனக் கேட்டதாய்”
தன் மகனை நற்பண்பு நிறைந்தவன் என பிறர் சொல்லக் கேள்வியுற்ற தாய், தான் அவனை பெற்ற காலத்தில் உற்ற மகிழ்ச்சியை விட பெரிதும் மகிழ்வாள்.

உலகமே அம்மா என்ற வார்த்தைக்கு அடிமை. அம்மாவுக்கு இணை இந்த உலகில் வேறு எதுவும் இல்லை. எம்மை பாராட்டி, சீராட்டி வளர்த்த அன்னைக்கு நாம் என்றென்றும் உறுதுணையாக இருக்க வேண்டும். தாயை அன்னையர் தினத்தில் மட்டுமல்லாது என்றென்றும் போற்றி வணங்க வேண்டும்.



ஆக்கம்: ர. அதிசயா

சட்டம் அறிவோம்

Online Safety Bill

ஆன்லைன் பாதுகாப்பு மசோதா என்பது இலங்கையின் இணையப் பாதுகாப்பு மசோதாவாகும். இது செப்டம்பர் 2023 இல் அறிவிக்கப்பட்டது மற்றும் 24 ஜனவரி 2024 அன்று பாராளுமன்றத்தால் 108-62 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இந்த மசோதா மனித உரிமைகள் குழுக்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளால் பேச்சு சுதந்திரத்தை முடக்கும் வழிமுறையாக விமர்சிக்கப்பட்டது.

ஏற்பாடுகள்

இந்த மசோதா ”இலங்கையில் உண்மையின் சில அறிக்கைகளின் ஆன்லைன் தகவல்தொடர்புகளை தடை செய்வதற்கான ஏற்பாடுகளை உருவாக்குதல்” மற்றும் ”தடைசெய்யப்பட்ட நோக்கங்களுக்காக ஆன்லைன் கணக்குகள் மற்றும் நம்பகத்தன்மையற்ற ஆன்லைன் கணக்குகளைப் பயன்படுத்துவதைத் தடுக்கிறது.” அது கருதப்படும் உள்ளடக்கத்தை இடுகையிடுவதற்கு முன்மொழிகிறது. ”சட்டவிரோதமானது” ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஆணையம், ஆன்லைன் பாதுகாப்பு ஆணையம், சிறை தண்டனை விதிக்கப்படும்.ஜ4ஸ இது போன்ற உள்ளடக்கத்திற்கு பேஸ்புக், கூகுள் மற்றும் ட்விட்டர் போன்ற சமூக ஊடக தளங்களையும் பொறுப்பாக்குகிறது.

தரவுத் திருட்டு, சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் ஆன்லைன் மோசடி உள்ளிட்ட இணையக் குற்றங்களை எதிர்த்துப் போராடும் நோக்கத்துடன் இந்த மசோதா கொண்டுவரப்பட்டது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறினார். பொது பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் கருத்துப்படி, 2023 இல் இலங்கையில் 8,000 சைபர் கிரைம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.ஜ4ஸஜ2ஸ

வரவேற்பு

இந்த மசோதா அரசாங்கம் பேச்சு சுதந்திரத்தை நசுக்க முயற்சிக்கிறது என்ற கவலையை ஏற்படுத்தியுள்ளது. மசோதா நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, செயற்பாட்டாளர்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குழு நாடாளுமன்ற கட்டிடத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உள்நாட்டு

எதிர்க்கட்சி அரசியல்வாதியான ரவூப் ஹக்கீம், இந்த சட்டமூலம், ”இந்த நாட்டில் எஞ்சியிருக்கும் கருத்துச் சுதந்திரத்திற்கான சில பாதுகாப்புகளை கூட சிதைத்து ஜனநாயகத்தை அழிக்க முயற்சிக்கும் அரசாங்கத்தின் வெளிப்பாடு” என்று கூறினார். ”எமது ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தல்”, ”இலங்கையில் மின்-வணிகத்தை விரிவுபடுத்துவதில் கடுமையான எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும், நமது இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவது மற்றும் வளர்ச்சியின் அவசியத் தேவையில் உள்ள நமது பொருளாதாரத்திற்கு உதவுவது” என்று கூறினார்.

இந்த மசோதாவின் நோக்கம் ”ஊடகங்களையோ அல்லது எதிர்ப்பையோ அடக்குவது அல்ல” என்று கூறிய அலெஸ், ”எந்தவொரு புகாரும் கமிஷனால் எடுக்கப்படும், அவர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார், அவர்கள் எப்படி செயல்பட வேண்டும் என்பதை முடிவு செய்வார்கள்.”

சர்வதேச...

2023 செப்டம்பரில் இந்த மசோதா அறிவிக்கப்பட்டபோது, ஆசிய இணையக் கூட்டமைப்பு இந்த மசோதாவை எதிர்த்தது, நிர்வாக இயக்குநர் ஜெஃப் பெய்ன், ”இந்த மசோதா, கருத்து வேறுபாடுகளையும், இலங்கையர்களின் கருத்துக்களையும் ஒடுக்குவதற்கான ஒரு கொடூரமான அமைப்பை வழங்குகிறது.” மனித உரிமைகள் கண்காணிப்பகமும் விமர்சித்தது. இந்த மசோதா, ஆன்லைன் பாதுகாப்பு ஆணையம் தன்னிச்சையாக ”ஆன்லைன் பேச்சு “தவறானது“ அல்லது “தீங்கு விளைவிக்கும்“ என்பதைத் தீர்மானிக்க முடியும், உள்ளடக்கத்தை அகற்றலாம், இணைய அணுகலைக் கட்டுப்படுத்தலாம் மற்றும் தடை செய்யலாம் மற்றும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் மீது வழக்குத் தொடரலாம்”.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங், மசோதாவின் சாத்தியமான தாக்கம் குறித்து கவலை தெரிவித்தார். ரஷ்ய தூதுவர் LEVAN DZHAGARYAN இந்த மசோதா முற்றிலும் இலங்கையின் உள்விவகாரம் என்று கூறினார்.

மருத்துவ பக்கம்

மாதம் ஒரு மூலிகை – வாழைப்பூ

வாழையின் அனைத்துப் பாகங்களுமே மருத்துவப் பயன் கொண்டவை. வாழைப்பூவை வாரம் இருமுறை சமைத்து உண்டு வந்தால் இரத்தத்தில் கலந்துள்ள தேவையற்ற கொழுப்புகளைக் கரைத்து வெளியேற்றும். இதனால் இரத்தத்தின் பசைத்தன்மை குறைந்து, இரத்தம் வேகமாகச் செல்லும்.

இரத்தத்தில் கலந்துள்ள அதிகளவு சர்க்கரைப் பொருளைக் கரைத்து வெளியேற்ற வாழைப்பூவின் துவர்ப்புத்தன்மை அதிகம் உதவுகிறது. இதனால் இரத்தத்தில் கலந்துள்ள சர்க்கரையின் அளவு குறைகிறது.

மூலநோயின் பாதிப்பினால் மலத்துடன் இரத்தம் வெளியேறுதல், உள்மூலம், வெளிமூலப் புண்கள் இவற்றுக்கு சிறந்த மருந்தாக வாழைப் பூவைப் பயன்படுத்தலாம். வாழைப்பூ மூலக்கடுப்பு, இரத்த மூலம் போன்றவற்றைக் குணப்படுத்தும்.

மலச்சிக்கலைப் போக்கும் . சீதபேதியையும் கட்டுப்படுத்தும். வாய்ப் புண்ணைப் போக்கி வாய் நாற்றத்தையும் நீக்கும்.

பெண்களுக்கு உண்டாகும் கருப்பைக் கோளாறுகள். மாதவிலக்கு காலங்களில் அதிக இரத்தப்போக்கு, அல்லது இரத்த போக்கின்மை, வெள்ளைப்படுதல் போன்ற நோய்களுக்கு வாழைப்பூவை உணவில் சேர்த்துக்கொண்டு வந்தால் நோய்கள் நீங்கும்.



தளத்தின் தடங்கள்

பசுமை முதலீடுகள் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் – ஆன்லைன் படிப்பு
04.05.2024

'வெற்றி பெற பேசுங்கள் - பயனுள்ள உரையாடல்களுக்கான நுட்பங்கள்,' – அமர்வு
04.05.2024

தொழில் பாதை
Career path

2வது ஆன்லைன் பாடத் தேர்வு
08.05.2024

விருட்சம் இதழ் வெளியீடு
08.05.2024

சிவி மேக்கிங் ரு லைட்ரும் ஆப்
CV MAKING

இரத்த தானம்
11.05.2024

உணவு திருவிழா
12.05.2024

Inauguration - Thiral

இலக்கு (எதிர்கால இலட்சியம்,
உயர்தர பாடத்தெரிவுகள்,
எதிர்கால தொழில் வாய்ப்புகள்)
21.05.2024

குழு உருவாக்கம் சிக்கல் தீர்க்கும் அமர்வு
22.05.2024

செயற்கை நுண்ணறிவு கருவிகள்
23.05.2024

விமான டிக்கெட் வகுப்பு
23.05.2024

கேன்வா (கிரபிக் டிசைனிங் அப்ளிகேஷன்)
Grapic Design & Applications
24.05.2024

இயற்கை விவசாயம் மற்றும்
இயற்கை சார் வாழ்வியல்
27.05.2024

ஆளுமை வளர்ச்சி
29.05.2024

அடிப்படை புகைப்படம் எடுத்தல்
மற்றும்
கேமரா கையாளுதல்
25.05.2024

டிஜிட்டல் மார்க்கெட்டிங்
30.05.2024



திருகோணமலையின் பொக்கிஷம் – புறா தீவு

புறா தீவு தேசிய பூங்கா இலங்கையின் மூன்று கடல்சார் தேசிய பூங்காக்களில் ஒன்றாகும். தேசிய பூங்கா கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒரு கடற்கரை நகரமான நிலாவெளி கடற்கரையில் இருந்து 1 கிமீ தொலைவில் அமைந்துள்ளது, மொத்தம் 471.429 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்டுள்ளது. தீவின் பெயர் பாறை புறாவிலிருந்து வந்தது, அது காலனித்துவப்படுத்தியது. தேசியப் பூங்காவில் இலங்கையில் எஞ்சியுள்ள சிறந்த பவளப்பாறைகள் உள்ளன. புறா தீவு 1963 இல் ஒரு சரணாலயமாக நியமிக்கப்பட்டது. 2003 இல் இது ஒரு தேசிய பூங்காவாக மீண்டும் நியமிக்கப்பட்டது, இது இலங்கையின் 17வது பூங்காவாக அமைந்தது. காலனித்துவ காலத்தில் இந்த தீவு படப்பிடிப்பு தளமாக பயன்படுத்தப்பட்டது. 2004 இல் இந்தியப் பெருங்கடல் சுனாமியால் பாதிக்கப்பட்ட பல பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் புறா தீவு ஒன்றாகும்.

உடல் அம்சங்கள்

புறா தீவு இரண்டு தீவுகளைக் கொண்டுள்ளது பெரிய புறா தீவு மற்றும் சிறிய புறா தீவு. பெரிய புறா தீவு ஒரு பவளப்பாறையால் சூழப்பட்டுள்ளது, மேலும் இது சுமார் 200 மீ நீளமும் 100 மீ அகலமும் கொண்டது. இதன் மிக உயரமான இடம் கடல் மட்டத்திலிருந்து 44.8 மீ உயரத்தில் உள்ளது. சிறிய புறா தீவு பாறை தீவுகளால் சூழப்பட்டுள்ளது. தேசிய பூங்கா இலங்கையின் உலர் வலயத்திற்குள் அமைந்துள்ளது. சராசரி ஆண்டு வெப்பநிலை 27.0° செல்சியஸ் ஆகும். ஆண்டு மழைப்பொழிவு 1,000–1,700 மில்லிமீட்டர்கள் (39–67 அங்குலம்) வரை இருக்கும் அதே வேளையில் பெரும்பாலான மழை அக்டோபர் முதல் மார்ச் வரையிலான வடகிழக்கு பருவமழை காலத்தில் பெறப்படுகிறது.

தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள்

பெரிய புறா தீவின் பவளப்பாறை விலங்கினங்கள் ஒக்ரோபோரா எஸ்பிபியால் ஆதிக்கம் செலுத்துகின்றன. பாறைத் தீவுகளைச் சுற்றியுள்ள பவளப்பாறைகளில் ஃபாவிடே, முசிடே மற்றும் பொரிடிடே இனங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. சினுலேரியா, லோபோபைட்டன் மற்றும் சர்கோபைட்டன் போன்ற மென்மையான பவளப்பாறைகள் உள்ள பகுதிகளையும் காணலாம். பவளப் பாறைகள் பல முதுகெலும்புகள் மற்றும் முதுகெலும்பில்லாத உயிரினங்களைக் கொண்டுள்ளன. திருகோணமலைப் பகுதியைச் சுற்றி பதிவுசெய்யப்பட்ட 100 வகையான பவளப்பாறைகள் மற்றும் 300 பவளப்பாறை மீன்களில் பல தேசிய பூங்காவில் காணப்படுகின்றன. ஆழமற்ற பவளப் பகுதிகளைச் சுற்றி இளம் மற்றும் வயது வந்த கரும்புள்ளிப் பாறை சுறாக்கள் காணப்படுகின்றன. ஒக்ஸ்பில் ஆமை, பச்சை ஆமை மற்றும் ஒலிவ் ரிட்லி ஆகியவை பவளப்பாறைகளுக்கு வருகை தரும் கடல் ஆமைகள். இந்த தீவு பாறைப் புறாவின் முக்கிய இனப்பெருக்கம் செய்யும் இடமாகும்.

உலகின் மிகவும் ஆபத்தான இடங்கள்

1. விட்டனூம், அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியா

தெற்கு அரைக்கோளத்தில் மிகப்பெரிய மாசுபட்ட தளமாக அறியப்படும் விட்டனூம், உலகின் மிக ஆபத்தான இடமாக நம்பர் ஒன் ஆகும். மேற்கு அவுஸ்திரேலியாவில் அமைந்துள்ள இந்த தளம் 1930 களில் நீல கல்நார் சுரங்கம் தொடங்கியதால் பரபரப்பான நகரமாக இருந்தது. 1950கள் மற்றும் 1960களின் முற்பகுதியில் விட்டனூம் அவுஸ்திரேலியாவின் நீல கல்நார் சப்ளையர் மட்டுமே ஆனால் லாபமின்மை மற்றும் வளர்ந்து வரும் உடல்நலக் கவலைகள் காரணமாக 1966 இல் மூடப்பட்டது. இன்று முழு இடமும் பார்வையாளர்களுக்கு மூடப்பட்டுள்ளது, மேலும் ஒஸ்பெஸ்டாஸ் மாசுபாட்டின் அளவைக் குறைக்க பெரும்பாலான கட்டிடங்கள் இடிக்கப்பட்டுள்ளன.

2. பாம்பு தீவு, பிரேசில்

பிரேசில்

பிரேசில் கடற்கரையில் அமைந்துள்ள பாம்பு தீவு உலகின் மிக ஆபத்தான இடங்களில் ஒன்றாக அறியப்படுகிறது. தீவின் உண்மையான பெயர் ஐடாய னய ஞரநஐஅயனய புசயனெந ஆகும், மேலும் அதன் ஆபத்தான நற்பெயர் காரணமாக, பிரேசில் அரசாங்கம் யாரும் வருகை தருவதை சட்டவிரோதமாக்கியது.

தீவு முழுவதும் தங்க ஈட்டித் தலை பாம்புகளால் நிறைந்துள்ளது, அவை பிட் விப்பர் இனமாகும். இது உலகிலேயே மிகவும் கொடியது. இந்தத் தீவின் கரைக்கு மிக அருகில் சென்ற கடைசி மீனவர் பற்றிய கதை உட்பட பல வதந்திகள் மற்றும் நாட்டுப்புறக் கதைகள் உள்ளன. அவரது உடல் சில நாட்களுக்குப் பிறகு இரத்த வெள்ளத்தில் உயிரற்ற நிலையில் கிடந்தது.

3. ஃப்ரேசர் தீவு, அவுஸ்திரேலியா

பிரமிக்க வைக்கும் கடற்கரைகள் மற்றும் அழகிய நீரைக் கொண்ட சுற்றுலாத் தலமாக அறியப்படும், அவுஸ்திரேலியாவில் உள்ள ஃப்ரேசர் தீவில் இங்கு ஒரு உண்மையான ஆபத்து உள்ளது. தொலைதூர தீவு பல வகையான விஷ சிலந்திகள், மிகவும் ஆக்ரோஷமான காட்டு டிங்கோ நாய்கள், கொடிய ஜெல்லிமீன்கள் மற்றும் சுறாக்களின் தாயகமாகும். பிரேசர் தீவுக்கு நீங்கள் கவனமாக பயணிக்க விரும்பலாம், ஏனெனில் காட்சிகள் பிரமிக்க வைக்கும் வனவிலங்குகள் உங்களைக் கொல்லக்கூடும்.



அவுஸ்திரேலியா

4. நியோஸ் ஏரி, கேமரூன்

நியோஸ் ஏரி அதன் நீரின் மேற்பரப்பில் ஒரு ஆபத்தான ரகசியத்தை வைத்திருக்கிறது, எரிமலை செயல்பாட்டின் காரணமாக கார்பன் டை ஒக்சைடு கசிவு வடிவில் உள்ளது. நிலைமைகள் சரியாக இருக்கும்போது, ஒரு "லிம்னிக் வெடிப்பு" ஏற்படலாம், இது பெரிய அளவிலான கார்பன் டை ஆக்சைடு வாயுவை ஏரியிலிருந்தும் காற்றிலும் வெடிக்கச் செய்கிறது. வாயு காற்றை விட கனமானதாக இருப்பதால், அது தரைக்கு மேலே ஒரு தடிமனான அடுக்கை உருவாக்குகிறது, மூச்சுத்திணறல் மூலம் மரணம் ஏற்படுகிறது. இது 1986 இல் நடந்தது, மேலும் 1,700 க்கும் மேற்பட்ட மக்கள் மற்றும் 3,500 கால்நடைகள் கொல்லப்பட்டன.

கேமரூன்

5. எலும்புக்கூடு கடற்கரை, அங்கோலா மற்றும் நமீபியா

அங்கோலாவின் தெற்கிலும் நமீபியாவின் வடக்கிலும் அமைந்துள்ள புகழ்பெற்ற எலும்புக்கூடு கடற்கரை, உலகின் மிகக் கொடிய இடங்களில் ஒன்றாகும். இந்த ஆபத்தான கடற்கரை குனேனே ஆற்றின் தெற்கிலிருந்து ஸ்வாகோப் நதி வரை நீண்டுள்ளது மற்றும் அதன் மிருகத்தனமான காலநிலை உயிர்வாழ்வதற்கான வாய்ப்பை அளிக்காது.

எலும்புக்கூடு கடற்கரை முழுவதும் வீசும் வெப்பக் காற்று மற்றும் உணவு மற்றும் நீர் பற்றாக்குறை ஆகியவற்றால், நிலைமைகள் அதை ஒரு சவாலான மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக ஆக்குகின்றன. யானைகள், ஆமைகள், முத்திரைகள் மற்றும் திமிங்கலங்கள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளின் எலும்புகளிலிருந்து எலும்புக்கூடு கடற்கரை அதன் பெயரைப் பெற்றது.

நமீபியா

விலங்குகள் பற்றிய சுவாரசியமான தகவல்கள்

1. குரங்கு ஓவியங்கள்

தென்னிந்தியாவில் உள்ள மலம்புழா அணைகட்டில்குரங்குகள் சுவரில் ஓவியங்கள் வரைவது கண்டறியப்பட்டுள்ளது! இது விலங்குகளின் கலைத் திறனைப் பற்றிய நமது புரிதலை மாற்றுகிறது.

2. தகவல் தொடர்பு காக்கைகள்

காகங்கள் மனிதர்களின் முகங்களை அடையாளம் காண முடியும் மற்றும் பிற காக்கைகளுடன் சிக்கலான ஒலிகளைப் பயன்படுத்தி தொடர்பு கொள்கின்றன. அவை கூட பகை கொண்ட பறவைகளை எச்சரிக்கின்றன்.

3. மீன்கள் மருத்துவ உதவி

மருத்துவ சுத்திகரிப்புக்காக மற்ற மீன்களின் உடலில் இருந்து ஒட்டுண்ணிகளை தூய்மைப்படுத்தும் “ரெம்மோரா“ என்ற மீன் வகை கடலில் காணப்படுகிறது. இது ஒரு கூட்டுவாழ்வு உறவு.

4. தங்கள் சிறிய குட்டிகளை நினைவில் வைத்திருக்கும் யானைகள்

ஆண் யானைகள் கூட தங்கள் குட்டிகளை 20 ஆண்டுகள் வரை நினைவில் வைத்திருக்கும் திறன் கொண்டவை என்று ஆய்வுகள் காட்டுகின்றன.

5. மணம் கொண்டு வேட்டையாடும் பூனை

பூனைகளின் முகத்தில் 30 மில்லியனுக்கும் அதிகமான மணம் உணரும் செல்கள் உள்ளன. இது மனிதர்களை விட 14 மடங்கு அதிகம். இதனால் மிகுந்த மணம் கொண்ட இரையை பூனைகள் எளிதாக வேட்டையாட முடியும்.



தளத்தின் ஆனி மாத திட்டங்கள்



- மேலைத்தேய நடன வகுப்புக்கள் வார இறுதி நாட்களில் இடம்பெற அதற்கான இடம் ஒதுக்கீடு செய்யப்படும்.
- ஒவ்வொரு சனிக்கிழமையும் 5.00 - 6.00 வரை அரசியல் சார் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல் அமர்வு மேற்கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- நேரடி அமர்வுகளில் கலந்து கொள்ள இயலாத சமூகத்தவரை கருத்திற் கொண்டு சனிக்கிழமைகளில் நிகழ்நிலை அமர்வுகள் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- போட்டி பரீட்சைக்கான தயார்ப்படுத்தலை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட அறிவாய்வியல் அமர்வுகள் வார இறுதி நாள் நடத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது
- விருட்சம் இதழ் வெளியீட்டிற்கான மாதாந்த கலந்துரையாடல்.
- தளம் - மாதாந்த கலந்துரையாடல் களப்பயணம்
- தசமம்
- விமான பயணச்சீட்டு வகுப்பு

அடுத்த மாத இதழுக்கான தலைப்பு

- நடைமுறை வாழ்க்கையில் செயற்கை நுண்ணறிவின் தாக்கம்
- இந்த தலைப்பில் உங்கள் கட்டுரை
- கவிதை
- கைத்தொலைபேசி புகைப்படம்
- ஓவியம்

கருத்துகள் போன்றவற்றை எழுதி அனுப்பி வைக்கலாம்

இந்த இதழில் இடம் பெற்ற புதிர்க ளுக்கு உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய தொலைபேசி இலக்கம் – 077 624 3212

முகவரி
முதல் மாடி, நகராட்சிமன்ற கட்டடத்தொகுதி, கடற்படைத்தள வீதி, திருகோணமலை.

தொலைபேசி இலக்கம் –
077 624 3212

கைத்தொலைபேசியின் புகைப்படம்




இதழாசிரியர் குழாம் விபரம்

செல்வி. ஜிதுஷா அன்டன் ஜுட்
தலைமை ஆசிரியர்

செல்வி மு. அபிநயா
உப ஆசிரியர்

செல்வி ஞா. நிதர்சனா
உப ஆசிரியர்

ந.பிரதீஷன்
உப ஆசிரியர்

தனிஸ்டன்
வடிவமைப்பாளர்

தளம்
THALAM

எமது மண்ணுக்காய் தளத்தின் குரல் எப்பொழுதும் ஒலித்துக்கொண்டே இருக்கும்